# ரூஹா சுவாச காற்று

காற்று - 15 மார்ச் 2025 சுவாசம் - 02

ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-

## மரித்தவைகளில் இருந்து அற்புதம்





# இதயம் திறந்து உங்களுடன்

அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன். இந்த செய்தி மடல் வழியாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த 2025ம் ஆண்டு உங்களுக்கு வெற்றியின் ஆண்டு! கர்த்தர் உங்களை சகல காரியத்திலும் வெற்றியைத் தந்து ஆசீர்வதிக்கப்போகிறார்.

கடந்த வருடத்தில் தேவன் ரூஹா ஊழியங்கள் மூலமாக இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், ஜனங்கள் பாவ, சாபக்கட்டுகளிலிருந்தும், வியாதியின் பிடியிலிருந்தும் விடுதலைப்பெறவும் கிருபை செய்தார். விசேஷமாக 2024ம் வருடம் ஜனவரி 1ம்தேதி, அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்பார் என்று சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தையை தேவன் நிறைவேற்றினார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

உங்களடைய ஊக்கமான ஜெபத்தினாலும், தியாகமான காணிக்கைகளினாலும்தான் இந்த ஊழியத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் சந்ததியையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக என்று உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

## ரூஹா ஊழியங்களின் 19வது ஆண்டு நிறைவு விழா

ரூஹா ஊழியங்கள் ஆரம்பித்து 19 ஆண்டுகள் நிறைவு செய்ய தேவன் கிருபை பாராட்டினார். ஊழியம் ஆரம்பித்த நாட்களை நான் திரும்பி பார்த்து கண்ணீரோடு கர்த்தரைத் துதிக்கிறேன். 2006ம் வருடம் பிப்ரவரி 19ம் தேதி அன்பு ஆவிக்குரிய தகப்பன் சாம் ஜெபத்துரை அவர்களால் துவக்கப்பட்ட இந்த ஊழியம், பல கோடிக்கணக்கான ஜனங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தையும், ஆசீர்வாதத்தையும், விடுதலையையும் தேவனிடமிருந்து பெற்று தந்திருக்கிறது என்பதில் சந்தேகமேயில்லை.

இந்த வருடத்திற்காக நான் தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தபோது, தேவன் மாபெரும் எழுப்புதின் காலத்திற்குள் நம்மை நடத்திச் செல்லுவதை பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினார். ஆகவே இப்பொழுது செய்கிற ஊழியப்பணிகளை விட இன்னும் பல்லாயிரம் பேருக்கு இந்த சுவிசேஷ ஊழியத்தை செய்ய வேண்டும் என்ற பாரத்தை தேவன் என் உள்ளத்திலே தந்தார்.

தேசம் கர்த்தரை அறிய வேண்டும் என்று எழுப்புதலுக்காக இரவும் பகலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கிற ரூஹா ஊழியங்களுக்காகவும் அடியேனுக்காகவும் தினமும் ஜெபிக்கும்படி உங்களை அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.

## அவசரமாக கட்டியெழுப்பப்பட வேண்டிய ஜெப மண்டபம்

தேசத்தில் பயங்கரமான ஆவிகள் எழும்பி ஜனங்களை வஞ்சிக்கவும், சபைகளுக்கு விரோதமாக செயல்படுகிறது. ஆகவே தேசத்தில் ஜெபத்தையும் ஆராதனையையும் அதிகப்படுத்துவது அவசியமாயிருக்கிறது. விசேஷமாக அப்போஸ்தலனாகிய தோமா இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக இரத்தம் சிந்தி மரித்த சென்னைப் பட்டணத்தின் மையப்பகுதியான புனித தோமையார் மலைப்பகுதியில் 24 மணி நேர துதி ஜெப மையத்திற்கன இடத்தை கடந்த வருடம் வாங்க கிருபை செய்தார்.

“விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டியெழுப்புவேன்” என்று சொன்ன வேத வார்த்தையின் படி, துதி மற்றும் ஜெபத்தினால் தேசத்தை சுதந்தரிக்கப்போகிறோம். இந்த எழுப்புதலின் காரியத்தில் உங்களுடைய பங்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஆகவே ஜெப மையத்தைக் கட்டி எழுப்புவதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். விசுவாசத்தில் பொருத்தனையோடு ரூஹா ஜெப மையத்தின் கட்டுமான பணிக்காக நீங்கள் விதைக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்
**போதகர் ஆல்வின் தாமஸ்**




# A Call to Build

INDIAN HOUSE OF PRAYER FOR EVERYONE

**IN-HOPE**

PRAISE · PRAY · PROCLAIM




## Would you like to be a pillar in the 24/7 House of Worship & Intercession that the Lord has envisioned to build in Chennai for the Blessing of the Nations?

## VISION

- Establish a 24/7 Altar where worshippers and intercessors will gather in Unity to raise an incense of prayer that cries out for Revival in our Nation.
- Create an Altar that will host the Presence of God, reminiscent of the restored Tabernacle of David.
- Build the Altar on the Martyred ground of Apostle Thomas on St. Thomas Mount.

## MISSION

- To build a facility to equip and empower prophetic worship intercessors who will Praise, Pray, and Proclaim breakthroughs.
- Create a roster of one/two hour slots for hosting Inter-Denominational Churches, Teams, and Individuals from across India and the Nations.
- Stream the "Movement on the Mount" 24/7 Globally, through a dedicated team of Media Missionaries.

## PROVISION

- To accomplish this mighty vision in the heart of Chennai, we invite Kingdom sowers who will partner with us to fulfill this crucial end-time mandate entrusted by Adonai.
- We believe that as you help us to build the House of God, He will surely bless you and your household Abundantly!
- Every sower's name will be engraved on a "Wall of Remembrance" and will be prayed over every day by our intercessors.

## SEEDS CAN BE SOWN @

1. **RUAH MINISTRIES BUILDING FUND**
   Acc. No.: **50200033712782** Bank Name: **HDFC BANK**
   Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

   **RUAH MINISTRIES**
   Acc. No.: **05741450000037** Bank Name: **HDFC BANK**
   Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

2. SCAN HERE TO GIVE

3. Cheque in Favour of: **Ruah Ministries Building Fund**

4. for giving online visit: **ruahministries.org/give-online**

FOR MORE INFORMATION **9884710777 | 9884901777**



தீர்க்கதரிசன செய்தி

# மரித்தவைகளில் இருந்து அற்புதம்

- போதகர். ஆல்வின் தாமஸ்

அன்பானவர்களே, நம்முடைய தேவனாகிய கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர். அவரால் செய்யக்கூடாத அதிசயமான காரியங்கள் ஒன்றுமே இல்லை. ஒரு நாள் தேவனுடைய பாதத்தில் அமர்ந்து ஜெபித்து வேதத்தை வாசித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது தேவன் தம்முடைய வல்லமையை எனக்கு காண்பிக்கும்படியாக எபிரேயர் 11ம் அதிகாரத்தில் 11 மற்றும் 12ம் வசனங்களின் மூலமாக என்னோடு இடைபட ஆரம்பித்தார்.

**விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெனண்ணி, கர்ப்பந் தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள். ஆனபடியால், சரீரஞ் செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள். (எபிரேயர் 11:11,12)**

ஜீவனுள்ளதிலிருந்து சிருஷ்டிப்பவர் மாத்திரமல்ல, மரித்த நிலைமையில் ஜீவனற்றதிலிருந்தும் ஜீவனை உருவாக்குவதற்கும் வல்லமை உண்டு. ஆம், நூறு வயதான ஆபிரகாமின் சரீரம் செத்து போயிற்று. ஆபிரகாமினால் சாராள் மூலமாய் குழந்தையை பெற்றுக்கொள்ள முடியாது. சாராளின் காப்பமும் பெலவீனமடைந்து, பெண்களுக்குரிய வழிபாடு நின்று போயிற்று. ஆனால் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன், ஆபிரகாம் மூலமாக சாராளுக்கு குழந்தையைப் பெற்றெடுக்க கிருபை செய்தார். இனி அவ்வளவுதான், முடியாது என்று மருத்தவ நிபுணர்கள் கூறினாலும் நம்முடைய தேவன் மரித்தவைகளிலிருந்து தேவன் அற்புதங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார்.

வியாதியினால் உங்கள் சரீரத்தில் உறுப்புகள் மரித்து கிடக்கிறதா? குடும்ப உறவுகளில் அன்பு செத்து கிடக்கிறதா? உங்கள் முயற்சிகள் தோல்வியடைந்து நம்பிக்கையற்ற நிலையில் காணப்படுகிறீர்களா? பொருளாதார வீழ்ச்சியினால் மிகவும் சோர்ந்து போயிருக்கிறீர்களா? வாழ்க்கையின் எதிர்காலம் கேள்வி குறியாய் இருக்கிறதா? ஏன் வாழ்கிறோம்

என்று கேள்வியால் உங்கள் ஆத்துமா செத்து போயிருக்கிறதா? பல முறை முயற்சி செய்தும் தேவனுடைய எதிர்ப்பார்ப்பின்படி, பரிசுத்தமாய் வாழ முடியவில்லை என்று ஆவிக்குரிய வாழ்க்கையில் செத்திருக்கிறீர்களா?

கவலைப்படாதீர்கள்! ஆபிரகாம் சாராளின் சரீரத்திலிருந்து தேவன் அற்புதங்களைக் கொண்டு வர முடியுமானால் உங்கள் வாழ்க்கையில் இந்த 2025ம் வருடம் தேவன் அற்புதங்களைச் செய்வார் என்பதில் சந்தேகமேயில்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த மிக முக்கியமான அதிகாரம், "**மரித்தோரை எழுப்புங்கள்**" **(மத்தேயு 10:8)** என்பதே. நீங்கள் எந்த காரியத்தில் மரித்து கிடக்கிறீர்களோ, அந்த காரியத்தில் எழும்ப வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். சரீரம் செத்தவனிலிருந்து தேவன் செய்த அற்புதம் சாதாரணமானது அல்ல, ஒரு தேசத்தையே அவர் உருவாக்கினார்.

பிரேசில் நாட்டில் என்ற 21 வயதான பெண்மணிக்கு தீடீரென்று மூளைச்சாவு ஏற்பட்டது. அவர்கள் வயிற்றில் இரட்டைக்குழந்தைகள் இருந்தன. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அந்த பெண்ணின் கருவில் இருந்த அந்த இரட்டைக்குழந்தைகளை 123 நாட்கள் அதாவது கிட்டதட்ட 4 மாதங்களுக்கு பிறகு உயிரோடு வெளியே கொண்டு வந்தார்கள். அந்த இரண்டு குழந்தைகளும் வயிற்றில் இருக்கும்போது மருத்துவர்கள், இயேசு நல்லவர், இயேசு நல்லவர் என்ற பாடலை கிட்டார் வாசித்து பாடிக்கொண்டிருந்தார்கள். அவர் பலமுறை இயேசு நல்லவர் என்று பாடி துதித்துக்கொண்டே இருந்ததால் மூளை செத்துப்போன அந்த பெண்ணின் கர்ப்பப்பையிலிருந்து இரண்டு குழந்தைகளைத் தேவன் உயிரோடு வெளியே கொண்டு வந்தார். எவ்வளவு பெரிய ஆச்சரியம்!

வெட்டப்பட்ட நிலைமையில் உயிரற்றதாய் காணப்படுகிறீர்களா? தேவன் உங்களை துளிர்விடச் செய்ய விரும்புகிறார். சில வேளைகளில் இலைகள் கருத்து, பழுத்து கீழே விழலாம். ஆனால் அதே இடத்தில் தேவன் புதிய குருத்தை இலையை தேவன் எழுப்ப முடியும். நம்முடைய தேவன் உயிர்ப்பிக்கிற தேவன். பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்து உயிர்ப்பிக்கிற ஆவியானார் என்று வேதம் இயேசுவைக்குறித்து சொல்கிறது.

## தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணுவதற்காக உயிர்ப்பிக்கிறார்

உங்கள் தேவன் எங்கே என்று சவால் விடும் இந்தியாவில் தேவன் தம்முடைய வல்லமையை விளங்கச் செய்யப்போகிறார். அதனிமித்தம் தேவனிடத்தில் அநேக ஜனங்கள் சேர்க்கப்படுவார்கள். வருகிற கடைசி கால எழுப்புதலில் தேவன் மரித்தோரை எழுப்பப்போகிறார். எல்லா இடங்களிலும் செத்தவர்கள் உயிரோடு எழுந்தார்கள் என்ற செய்தியை கேள்விபடப்போகிறோம்.

**என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிபடப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள் (எசேக்கியேல் 37:13)**

தேவன் ஒருவரே கர்த்தர், அவர் வல்லமையுள்ளவர் என்று ஜனங்கள் எல்லாரும் அறிந்து கொள்ளத்தக்கதாக பிரேதக்குழி யிலிருந்து பிரேதத்தை தேவன் உயிரோடு எழுப்புவார். உங்கள் கோப்புகள் மூடபட்டிருக்கலாம், உங்களுக்காக வழக்காட உதவி செய்ய யாரும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் தேவன் உங்களை விசாரித்து குழியிலிருந்து உங்களை எழுப்பப்போகிறார். சொந்த சகோதரர்கள் யோசேப்பைக் குழியில் போட்டார்கள். ஆனால் தேவன் குழியை படிக்கட்டாக மாற்றி, எகிப்து தேசம் அனைத்திற்கும் பிரதம மந்திரியாக உயர்த்தினார். குழியில் அகப்பட்டு கிடக்கிறீர்களா? தேவன் உங்களைத் தம்முடைய வல்லமையால் உங்களை உயிர்ப்பித்து எழுப்புவார்.

**தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது (அப்போஸ்தலர் 2:24)**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மரணம் என்கிற கட்டை அவிழ்த்து, எழுப்பின பிதாவாகிய தேவன் உங்களை எழுப்ப சித்தங்கொண்டிருக்கிறார். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி தேவன் உங்களையும் தம்முடைய வல்லமையால் எழுப்புவது நிச்சயம். சாவுக்கேதுவான சரீரங்களை உயிர்ப்பிக்கிற ஆவியானவர் உங்களையும் எழுப்புவார்.

## தம்முடைய மனதுருக்கத்தினால் உங்களை எழுப்புவார்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாயீன் ஊருக்கு சென்றிருந்தபோது, அங்கே மரித்த வாலிபனை பாடையில் சுமந்து கொண்டு வந்தார்கள். அப்பொழுது இயேசு அந்த பாடைக்கு அருகே சென்றார். தன்னுடைய ஒரே மகன் மரித்ததினிமித்தம் மிகவும் அழுது கொண்டு, இனி நான் என் செய்வேன் என்று கலங்கின அந்த வாலிபனின் தாயின் கண்ணீரைக்கண்டு அவள் மேல் மனதுருகி, அழாதே என்று சொல்லி, பாடையைத் தொட்டு விதவைத்தாயின் மகனை உயிரோடு எழுப்பினார்.

சாறிபாத் என்ற ஊரில் வசித்துக்கொண்டிருந்த விதவையின் மகன் இறந்துவிட்டான். ஆனால் எலிசா தீர்க்கதரிசி தேவனுடைய மனருதுக்கத்தினால் உயிரோடு எழுப்பினார். சூனேம் என்ற ஊரில் உள்ள பெண்ணின் இறந்த மகனை எலிசா தீர்க்கதரிசி குப்புற விழுந்த தேவனுடைய மனதுருக்கத்தினால் எழுப்பினார்.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் தேவ பிள்ளையே உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் உன்னை எழுப்புவார். தேவனுடைய மனதுருக்கம் செத்துப்போன சூழ்நிலையில்

இருக்கும் உன்னுடைய வாழ்க்கையில் புதிய நம்பிக்கையைத் தரும். உங்கள் பிள்ளைகளுக்காக கண்ணீரோடு தேவனை நோக்கி விண்ணப்பம் செய்யும் பெற்றோர்களே, கர்த்தர் உங்கள் கண்ணீரின் ஜெபத்திற்கு பதில் தருகிறார். உங்கள் பிள்ளையின் வாழ்க்கையில் திருப்புமுனையை உண்டாக்குகிறார். புதிய வால்களைத் திறந்து, அழகான எதிர்காலத்தை சோர்ந்துபோகாதிருங்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்.

## உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உண்டாக எழுப்புவார்

**இயேசு அவனை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (மத்தேயு 11:25)**

பெத்தானியா என்ற கிராமத்தில் இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாயிருந்த லாசரு மரித்துவிட்டான். அப்பொழுது நான்கு நாட்களுக்கு பிறகு இயேசு வந்தபோது, லாசருவின் சகோதரியாகிய மார்த்தாளைப்பார்த்து, நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்.

இங்கு இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதல் ஒரு வினைச்சொல்லாக சொல்லவில்லை, மாறாக பெயர்ச்சொல்லாக நான்தான் உயிர்த்தெழுதல், நான் உயிரோடு எழுப்புவேன் என்று எவன் விசுவாசிக்கிறானோ அவனுக்கு மறுவாழ்வு உண்டு என்று சொல்லுகிறார்.

தேவனால் செத்தவைகளை உயிரோடு எழுப்ப முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உயிர்தெழுதலின் நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதா? தேவனால் உங்களுடைய சூழ்நிலையை தலைகீழாய் மாற்ற முடியும் என்று ஆணித்தரமாய் நம்புகிறீர்களா?

உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இருந்தால் தேவன் உங்களை நிச்சயமாக எழுப்புவார். **மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன் (ரோமர் 4:17)** என்று ஆபிரகாம் உயிர்த்தெழுதலைக்குறித்து விசுவாசித்தபடியால் தேவன் ஈசாக்கைக்கொடுத்து விசுவாசத்தைக் கனம்பண்ணினார்.

மனித உடலில் உள்ள 33 எலும்புகளுக்கு இடையே மேலும் கீழுமாக என்ற திரவம் கடந்து செல்லுகிறது. அந்த திரவம் 28 நாட்கள் இயங்கிறது. இரண்டரை நாட்கள் அந்த திரவம் மரித்து, மூன்றாம் நாள் அது உயிர்ப்பிக்கிறது. அது விசேஷமாக உடல் எலும்புகளின் உள்வெட்டுத்தோற்றத்தில் சிலுவைப்போன்று காட்சியளிக்கிற என்ற இடத்தில் அது மரித்து, மூன்றாம் நாளில் உயிர்ப்பிக்கப்படுகிறது. இது எதைக்குறிக்கிறது என்றால் ஒவ்வொரு மாதமும் கர்த்தர் நம்மை உயிர்ப்பித்து காப்பாற்றுகிறார்.

**ஒரு மகள் எங்கள் ஆலயத்திற்கு வந்தாள். அவள் கர்ப்பந்தரிக்கும்போதெல்லாம் கரு சிதைந்துவிடும். இதுபோல் மூன்று முறை நடந்துவிட்டது. மறுபடியும் கற்பமுற்றாள். அதனால் கர்ப்பம் நிற்கும்படி ஆலயத்திற்கு விசுவாசத்தோடு ஜெபிக்க வந்தாள். அவளுக்காக நாங்களும் விசுவாசத்தோடு ஜெபித்தோம். நான் செய்கிறதை நான் தடுப்பவன் யார்? (ஏசாயா 43:13) என்ற வசனத்தைச் சொல்லி அதிகாரத்தோடு ஜெபித்து அனுப்பினேன். கரு நின்றது. ஸ்கேன் எடுத்து பார்த்தபோது இரட்டைக்குழந்தைகள் என்று ரிப்போர்ட் வந்தது. சில நாட்களுக்கு பின்பு வயற்றில் கட்டி இருக்கிறது என்று ஜெபிக்க வந்தாள். பாரத்தோடு ஜெபித்தோம். உங்களில் நற்கிரியைத் தொடங்கினவர் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்ற வசனத்தை அனுப்பி ஜெபித்தேன். மறுபடியும் ஸ்கேன் எடுத்தார்கள். அது கட்டி இல்லை, மூன்றாவது குழந்தை என்று ரிப்போர்ட் வந்தது. பின்பு மூன்று குழந்தைகளையும் பெற்றெடுக்க தேவன் கிருபை செய்தார்.**

அன்பான தேவனுடைய பிள்ளைகளே... உயிர்ப்பிக்கிற தேவன் மேல் அதிகமான விசுவாசம் வையுங்கள். தேவன் ஒருவரே உங்கள் மரித்த நிலைமையை மாற்றி, உங்களை உயிர்ப்பிக்க முடியும். இந்த வருடம் கர்த்தர் உங்கள் சிறை யிருப்பை மாற்றி உங்கள் வாழ்க்கையில் புதிய அத்தியாத்தைத் துவக்கப்போகிறார். நீங்கள் உயர எழும்பி பறக்கப்போகிறீர்கள். நெடுநாளாய் நீங்கள் காத்திருந்த காரியத்தில் தேவன் ஒரு அற்புதத்தைச் செய்து உங்களை ஆச்சரியப்படச் செய்யப்போகிறார். தேவன் தம்முடைய வல்லமையினால் உங்களை அநேகருக்கு சாட்சியாக நிறுத்துவார்.


RUAH REVIVAL CHURCH
WEEKLY SERVICES

DEBORAH WOMENS Fellowship
EVERY TUESDAY
EVENING 6.30PM

The touch of Jesus
EVERY WEDNESDAY
MORNING 10AM-1PM

MENS Fellowship
EVERY SATURDAY
MORNING 7AM-9AM

ARROWS youth SERVICE
EVERY SATURDAY
EVENING 6.30PM

# வேலூர் பேரின்ப பெருவிழா






வேலூரில் நடைபெற்ற பேரின்ப பெருவிழாவின் கடைசி இரண்டு நாட்கள் கூட்டத்தில் (பிப்ரவரி 08,09) நமது சகோதரர் ஆல்வின்தாமஸ் அவர்கள் துதி ஆராதனை ஏறெடுத்து, தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். இரண்டு நாட்களும் தேவ ஆவியானவர் வல்லமையாய் அசைவாடி, ஜனங்களுக்கு விடுதலையைக் கொடுத்தார். துதி ஆராதனை வேளையின்போது, அநேகருக்குள் இருந்த அசுத்த ஆவிகள் வெளியேறியது. தெய்வீக சுகத்தையும் அற்புதத்தையும் ஜனங்கள் பெற்றுக்கொண்டார்கள். கடைசி நாள் கூட்டத்தின் முடிவில் ஒவ்வொரு ஜனங்களுக்கும் எண்ணெய் பூசி விசேஷ ஜெபத்தை போதகர் ஏறெடுத்தார். இக்கூட்டங்களை **கிறிஸ்துவின் சேனை ஊழியங்களின் ஒருங்கிணைப்பாளர் சகோதரர் அன்பு மற்றும் குழுவினர்கள்** சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். மேலும் **சீயோன் பெந்தெகொஸ்தே சபையின் தலைமைப்போதகர் இம்மானுவேல் பால்** அவர்கள் பாராட்டின ஆதரவிற்கும் உபசரிப்பிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பேரின்ப பெருவிழாவில் கர்த்தர் செய்த அற்புதங்கள்



### எலும்பு தேய்மானம் சுகமானது

எனக்கு அநேக நாட்களாக வலது கால்வலி இருந்து வந்தது. மருத்துவரிடம் சிகிச்சைக்காக சென்றபோது எலும்பு தேய்மானம் என்று சொல்லிவிட்டார்கள். கூட்டத்திற்கு வரும்போது மிகுந்த கால்வலியோடு வந்தேன். ஆனால் ஜெபவேளையில், போதகர் எலும்பு சம்பந்தப்பட்ட வியாதியால் கஷ்டபடுகிறவர்களுக்கு கர்த்தர் இப்பொழுது சுகத்தைத் தருகிறார் என்று சொன்னபோது, என்னுடைய கால்வலியை குணமாக்கும் என்று ஜெபித்தேன். இப்பொழுது கர்த்தர் என்னுடைய கால்வலியை முற்றிலுமாக சுகமாக்கிவிட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

### மூட்டு வலியிலிருந்து கர்த்தர் சுகம் கொடுத்தார்



2020ம் வருடம் கொரோனா நேரத்தில் எனக்கு முட்டி எலும்பு தேய்மானம் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். இன்னும் கொஞ்சம் நாளில் உங்களுடைய இரண்டு முட்டி எலும்பும் அரித்துவிடும் என்றார்கள். தொடர்ந்து மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் போதகர் ஜெபிக்கும்போது, எலும்பு மஜ்ஜைகளுக்குள் கர்த்தருடைய சுகமளிக்கிற வல்லமை கடந்து வருகிறது என்று சொன்னபோது, இருந்த வலி எல்லாம் போய்விட்டது. கர்த்தர் எனக்கு பூரண சுகத்தைக் கொடுத்துவிட்டார் என்று விசுவாசிக்கிறேன்.



# RUAH MINISTRIES 19th ANNIVERSARY

2006 - 2025

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நம்முடைய ரூஹா ஊழியங்களின் 19வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. இதுவரை வழிநடத்தி வந்த தேவனை ஸ்தோத்தரித்து, கர்த்தர் செய்த நன்மைகளுக்காக நன்றிபலிகளை ஏறெடுத்தோம். ரூஹா திருச்சபை விசுவாசிகள், இளம்போதகர்கள், பங்காளர்கள், நலம் விரும்பிகள் என அனைவரும் ஆண்டு விழாவில் கலந்து கொண்டார்கள். இந்த ஆண்டு விழாவில் கர்த்தரால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டு வரும் **தீர்க்கதரிசி லென்னிஸ் டென்னிசன்** கலந்து கொண்டு தீர்க்கதரிசன வார்த்தைகளை அளித்து, விசேஷ ஜெபங்களை ஏறெடுத்தார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. இனி வருகிற நாட்களில் அழிந்து போகிற ஆத்துமாக்களை கிறிஸ்துவின் சிலுவையண்டை நடத்த தேவையான கிருபைகளை ரூஹா ஊழியங்களுக்கு தேவன் தரும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள். ரூஹா ஊழியங்களுக்காக ஜெபிக்கின்ற, காணிக்கைகளால் தாங்குகின்ற ஒவ்வொரு தேவ பிள்ளைகளையும் “கோடா கோடியாய் பெருகுவீர்களாக” என்று மனதார வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.



ஆதரவற்றவர்களுக்கு கரம் கொடுக்கும்

# நெசா தொண்டு நிறுவனம்

NESSA
I am a Miracle

அன்பானவர்களே.. நமது நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஏழை எளிய ஜனங்களுக்கு பல உதவிகளைச் செய்து கொண்டு வருகிறோம். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 500க்கும் மேற்பட்ட ஆதரவற்றவர்கள், மாற்றுத்திறனாளிகள், ஏழைகளுக்கு புதிய ஆடைகளை அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது.

ஒவ்வொரு நாளும் சுமார் 300க்கும் அதிகமானோருக்கு மதிய உணவு அளித்து வருகிறோம். ஒவ்வொரு மாதமும் 50 குடும்பங்களுக்கு அரிசி மளிகை பொருட்கள் அடங்கிய நெசா அற்புத பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நற்காரியங்களை செய்வதற்கு பொருளாதாரத்தினால் தாங்கி வருகிற உங்களை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

உங்களுடைய பிறந்தநாள் மற்றும் திருமண நாட்கள் போன்ற விசேஷ நாட்களில் ஆதரவற்றவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் உதவி செய்து உங்கள் மகிழ்ச்சியான நாளைக் கொண்டாடுங்கள்.

**நீங்கள் அனுப்புகிற நன்கொடைக்கு 80G வரிவிலக்கு உண்டு**







nessatrust.67026734@hdfcbank

Share the Love

**NESSA TRUST**
**HDFC BANK**
AC.NO: **50200002673830**
BRANCH: **KODAMBAKKAM**
IFSC CODE: **HDFC0000574**
**94441 50777**

# Glorious Weddings

UNITING HEARTS... FOR GOD'S GLORY!

Empowering Christian singles to find lasting love and companionship rooted in faith. Join us as we unite hearts in the sacred covenant of marriage.

திருமணத்தின் புனித உடன்படிக்கையில் இதயங்களை ஒன்றிணைக்க எங்களுடன் சேருங்கள்.

## FIND YOUR PERFECT MATCH IS EASY

SCAN HERE TO **REGISTER NOW**

FOR MORE DETAILS **+91 9176258777**

**www.gloriousweddings.in**


